திரு. ஜே. ஜேம்ஸ் : மத்திய அரசாங்கத்தின் அனுமதிக்காக அனுப்பப் பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அனுமதி வருவதற்குள் கடலரிப்பினால் பெரிய சேதங்கள் ஏற்பட இருக்கின்றன. ஆகவே, அனுமதியை எதிர் பார்த்து அந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல் படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இதுபோன்ற கடலரிப்பினால் ஏற்படக்கூடிய தீமைகளை மனதில் கொண்டுதான் திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கிறது. உடனடியாக ஏற்படக்கூடிய சேதங்களைத் தவிர்க்க தமிழக அரசு அப்போதைக்கப்போது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. இதுபோன்றத் திட்டத்தைக் கேரள அரசு தயாரித்து அனுப்பியதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது. ஆகவே, நம்முடைய இந்தத் திட்டத்தை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளும் என்று நம்புகிறேன்.

Tapioca cultivation in Killiyoor.

* 474 Q.—THIRU N. DENNIS.—Will the Hon'ble the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the package scheme for Tapioca has been given up in Killiyoor block in Kanyakumari district ; and

(*b*) the steps taken to revive this scheme ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) இத்திட்டத்தை மறுபடியும் செயல் படுத்துவதற்கு எந்தவித நடவடிக்கையும் தற்போது எடுக்கவில்லை.

திரு. என். டென்னிஸ் : மரவள்ளிக் கிழங்கு அதிமகாகப் பயிரிடக் கூடிய இடம் கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியன் ஏரியா. திரும்பவும் அந்தத் திட்டத்தை அமுல்படுத்த அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தற்போது இல்லை என்று சொன்னேன். அங்கு துவக்கப்பட்டவற்றில் சில சரியாக செயல்படாத காரணத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சம்பந்தப்பட்டவர்கள் மீது இப்போது வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரைவில் முடிக்க ஏற்பாடு செய்து அதற்கேற்றவாறு மறு பரிசீலனை செய்யப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்தத் திட்டம் நல்ல திட்டம். அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்துக் கொண்ட காரணத்தால் இதைக் கைவிடுவதற்குத் தேவையில்லை. ஆகவே, நடவடிக்கைகள் ஒரு பக்கம் நடந்தாலும் இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்த அரசு ஆவன செய்யுமா ?

1973 மார்ச் 22]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அதிகாரிகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை காரணமாக நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதல்ல. மீண்டும் துவக்க என்னென்ன திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டுமென்பதை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

சிங்கோனு தோட்டத் தொழிலாளர்கள்.

*475 வினு.—திரு. கா. வேழவேந்தன் & திரு. இ. ராமசாமி: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா ?

சிங்கோனு தோட்டத் தொழிலாளர்களுக்கும் மற்ற மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குத் தரப்படும் வீதத்தில் ஊதியம் அளிக்கும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஒ. பி. ராமன் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : அந்த சிங்கோனு துறை இயக்குநருடன் கூட்டாகப் பேசி ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அதை அமல்படுத்த படிப்படியாக அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன் : அதை அமல்படுத்துகின்ற வகையில்தான் இந்த ஆண்டுகூட சம்பளம் உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. இ. இராமசாமி : இந்த ஆண்டு சம்பளம் உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எவ்வளவு உயர்த்தப்பட்டிருக்கிறது ? தனியார் துறையில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்குக் கிடைக்கின்ற அளவுக்கு சிங்கோனு தோட்டத் தொழிலாளர்களுக்கும் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன் : இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ரூ. 2.60-ல் இருந்து ரூ. 2.75 ஆகவும், ரூ. 2.80-ல் இருந்து ரூ. 2.95 ஆகவும் மாற்றப்பட்டிருக்கிறது. தனியார் தோட்டத்தில் கொடுக்கும் அளவுக்குக் கொடுக்கும் சூழ்நிலை இப்போது இல்லை. தோட்டத் தொழிலில் கூட ஒவ்வொரு தொழிலைப் பொறுத்து சம்பள வேறுபாடு இருக்கிறது. அப்போதைக்கப்போது பரிசீலித்து மேற்கொண்டு உயர்த்தப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : சிங்கோனு தோட்டத்தில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் மிகக் குறைந்த கூலி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஞாயிற்றுக்கிழமை விடுமுறை, சம்பளம் கிடையாது. ஒரு நாளைக்கு இரண்டு ரூபாய்க்கு மேல் கிடைக்காத நிலைதான் இருக்கிறது. அவர்களுக்குக் குடியிருப்பு வசதியும் சரியாக இல்லை. ஆகவே, விசேஷ கவனம் செலுத்தி குடியிருப்பு வசதியாவது செய்து கொடுக்கப்படுமா ?